Volume: 03 Issue 01 Feb: 2024

களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies
E-ISSN : 2456-5148
www.ngmtamil.in

# பெண்களின் அபிவிருத்தியை நோக்கிய நுண்கடன் திட்ட அமுலாக்கங்களும் அவை பயனாளிகளின் சமூக, பொருளாதார நிலைமைகளில் நடைமுறையில் ஏற்படுத்தும் விளைவுகளும் - மாவடிவேம்பு 02 கிராமசேவகர் பிரிவை மையமாகக் கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு.

[1] ரா. கிருஷிகா , [2] கு. விக்னேஸ்வரன்

[1]சிறப்புக் கலைமாணி பட்டதாரி, சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

[2]சிரேஸ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## ஆய்வுச்சுருக்கம்

இன்றைய சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்ற பட்சத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களின் மத்தியில் அவர்களது அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. இவ்வாறான பட்சத்தில் 1976 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட நுண்கடன் திட்டமானது ஏழை மக்களையும், பெண்களையும் பிரதான இலக்காளர்களாக கொண்டு சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வறுமை தணிப்பிற்கான கருவியாக அறிமுகப்படுத்தப்பட்டது. பங்களாதேஷில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டமானது ஏற்படுத்திய வெற்றிகரமான மாற்றங்களின் விளைவாக ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் பங்களாதேஷின் நடைமுறைகளை அடியொற்றி நுண்கடன்திட்டத்தினை அமுல்படுத்தும் வேளை இலங்கையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வகையில் இவ்வாய்வுக்கட்டுரையானது ஆய்வுப்பிரதேசமான மாவடிவேம்பு-02 கிராமசேவகர் பிரிவில் பெண்களின் அபிவிருத்தியில் நுண்கடன் திட்டமானது எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்வதாக அமைந்துள்ளது. இவ்வாய்வின் ஆய்வு முறையியல்களாக பண்பு ரீதியான விடயங்கள் கூடுதலாக உள்ளடக்கப்பட்ட போதிலும் எண்ரீதியான விடயங்களும் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுசேகரிக்கும் முறைகளாக 2019 இல் மாவடிவேம்பு – 02 கிராமசேவகர் பிரிவில் நுண்கடனை பெற்ற பெண் பயனாளிகள் மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். LOLC Development Finance (BRAC), LOLC, HNB Grameen Finance Ltd, Commercial Credit & Finance PLC, Berendina, YMCA, RDB, People's Bank, BOC, samurdhi ஆகிய 10 நிறுவனங்களிடமிருந்தும் வழங்கப்பட்ட 591 நுண்கடன்களிலிருந்து நோக்கமாதிரியை (purposive sampling) பயன்படுத்தி எளிய எழுமாற்று மாதிரித்தெரிவின் (simple random sampling) அடிப்படையில் 50 நுண்கடனைப் பெற்ற பெண்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்தின் மூலம் தரவுசேகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியாள்விடய ஆய்வு, நேர்காணல்முறை, மையக்குழுக்கலந்துரையாடல் முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வானது நுண்கடனானது பெண்களின் அபிவிருத்தியில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றது, அதனுடைய அனுகூலத்தன்மை, பிரதி கூலத்தன்மைகள், அதன் இலக்கு வெற்றியளிக்காமைக்கான காரணங்கள், இத்திட்டம் குறித்து பயனாளிகளுக்கும், வழங்குனர்களுக்கும் உள்ள திட்டமிடல் செயன்முறை என்பவற்றை என்பவற்றை விளக்குவதாக அமைந்துள்ளது. மேலும் சமுதாய அபிவிருத்தி சட்டகத்திற்குரிய நுட்பங்களை பின்பற்றாது அமுல்ப்படுத்தப்படும் நுண்கடனானது எவ்வாறு விளைதிறன் மிக்கதாக அமையாமல் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது, எனவும், பெண்களின் அபிவிருத்தியில் நேர்நிலையயான விளைவுகள் ஏற்படும் பட்சத்தில் நுண்கடன் திட்டம் எவ்வாறு அமுலாக்கப்படுகின்றது என்பதையும் சமுதாய அபிவிருத்தி நுட்பங்களுடன் பொருந்தும் வகையில் நுண்கடன் திட்டம் அமுல்ப்படுத்தப்படவேண்டும் எனவும் இவ்வாய்வு நிரூபிக்கின்றது.

**திறவுச் சொற்கள் (Keywords):** நுண்கடன், பெண்களின் அபிவிருத்தி,, சமூக விளைவுகள், பொருளாதார விளைவுகள், சமுதாய அபிவிருத்தி.

## 1. அறிமுகம்

பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகவும், பெண்களை வலுவூட்டுவதற்காகவும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் நுண்கடன் திட்டமும் பெண்களின் அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் ஆக்கக் கூறாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படுகின்றது. நுண்கடன் என்பது ஏழை மக்களது வறுமையை குறைத்து அவர்களை சமூக, பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதை நோக்காக கொண்டு குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படும் சிறுகடன் தொகையாகும். இவ்வகையிலே பங்களாதேஷின் நுண்கடன் திட்ட நடைமுறைகளை பின்பற்றியே ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் நுண்கடன் திட்டத்தை அமுல்படுத்தி வரும் அதேவேளையில் இலங்கையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். குறிப்பாக இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 30 ஆண்டுகாலமாக இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் 2009ம் ஆண்டிலிருந்து பெண்களின் அபிவிருத்தி கருதி பல அரசசார்பற்ற நிறுவனங்களும், தன்னார்வ நிறுவனங்களும் அதிகளவான வட்டி வீதத்தில் நுண்கடன்களை வழங்கி வருகின்றன. இதனால் பெண்கள் சமூக, பொருளாதார அபிவிருத்தி ரீதியில் பாதிப்படைந்து பல சமூகப், பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவ்வாறான விளைவுகளின் அடிப்படையிலயே ஆய்வுப்பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு- 02 கிராம சேவகர் பிரிவில் நுண்கடன் திட்டமானது பெண்களின் அபிவிருத்தியில் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதையும், நுண்கடன் திட்டத்தால் இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறுவதற்கான காரணங்கள் என்ன, நுண்கடன் திட்டங்கள் பெண்கள் மத்தியில் ஏற்படுத்திய முன்னேற்றகரமான மாற்றங்களின் அடிப்படையில் அவ் வங்கிகள், நிறுவனங்கள் எவ்வாறு நுண்கடன்களை வழங்குகின்றன என்பதையும், சமுதாய அபிவிருத்தி சட்டக நுட்பங்களுடன் பொருந்தும் வகையில் அமுல்படுத்தப்படும் நுண்கடன் பயனாளிகளுக்கு எவ்வாறான பலன்களை அளிக்கின்றது என்பதையும், அவ்வாறு சமுதாய அபிவிருத்தி சட்டகத்தின் அடிப்படை அம்சங்களை கொண்டிராத வகையில் அமுல்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நுண்கடன் திட்டங்கள் நடைமுறையில் எவ்வாறு விளைதிறன் மிக்கதாக அமையாமல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதையும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான முன்மொழிவுகளையும் அது தொடர்பான விளக்கங்களையும் மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

### 1.1. ஆய்வுப்பிரச்சினை

நுண்கடன் திட்டமானது பங்களாதேஷினுடைய நுண்கடன் திட்ட நடைமுறையின் அடிப்படைகளையும், கொள்கைகளையும் பின்பற்றியதாகவே அமைந்த ஒன்றாகும். இதனடிப்படையில் நுண்கடன் திட்டமானது சமுதாய அபிவிருத்தி சட்டகத்திற்கும் (Framework) கொள்கைக்கும், அவற்றின் அடிப்படை அம்சங்களுடன் பொருந்தி காணப்படாத பட்சத்தில் விளைதிறன் மிக்கதாக அமைவதில்லை. இது நேரடியாக நுண்கடனின் இலக்காளர்களான

பெண்களின் அபிவிருத்தியில் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இவ்வடிப்படையிலேயே ஆய்வுப்பிரதேசத்தில் பயனாளிகளாக பெண்களின் சமூக, பொருளாதார நிலைமைகளில் நுண்கடன் திட்டத்தின் விளைவுகள் அதிகரித்து காணப்படுகின்றது. குறிப்பாக தற்கொலை, வறுமை, உடல், உள ரீதியான பாதிப்பு, கணவன் மனைவிக்கிடையிலான பிணக்குகள், விவாகரத்து, மறுமணம், துஸ்பிரயோகத்திற்குள்ளாதல், துன்புறுத்தப்படல், கடனை செலுத்துவதற்காக பெண்கள் வெளிநாட்டிற்கு செல்லுதல், இதனால் ஒட்டுமொத்தமாக அக்குடும்பத்திலுள்ள சிறுவர்கள் பாதிக்கப்படல் என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இது அவர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பாதக விளைவுகளாக காணப்படுகின்றது.

எனவே சமுதாய அபிவிருத்தி சட்டக நுட்பங்களுக்குரிய நடைமுறைகளை பின்பற்றி அமுல்படுத்தப்படாத நுண்கடன் திட்டமானது பெண்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பது இவ் ஆய்வுத்தலைப்பிற்குரிய ஆய்வுப்பிரச்சினையாக முன்வைக்கப்படுகின்றது. அதாவது நுண்கடனை வழங்குனர்களால் முறையான திட்டமிடலில்லாமல் அமுல்படுத்தப்படும் நுண்கடன் திட்டங்களும், அதன் பயனாளிகளான பெண்கள் அத்திட்டம் குறித்து உள்நோக்கமின்றி செயற்படுவதாலும், அதனை முறையான திட்டமிடலில்லாமல் பயன்படுத்தும் விதத்திலும் காணப்படும் குறைபாடுகள் பெண்களின் அபிவிருத்தியில் குறிப்பாக சமூக, பொருளாதார ரீதியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

### 1.2. ஆய்வு நோக்கம்

நுண்கடன் திட்டங்கள் சமுதாய அபிவிருத்தியில் செலுத்தும் பங்களிப்பினை பெண்களின் அபிவிருத்தியோடு பிரத்தியேகமாக தொடர்புபட்ட வகையில் ஆய்வு செய்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். உப நோக்கங்களாக,

1. நுண்கடன் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் வழிமுறைகளை விபரித்தல்.
2. நுண்கடன் திட்ட பயனாளிகள் மற்றும் வழங்குனர்கள் அத்திட்டங்களின் அமுலாக்கங்கள் தொடர்பில் கொண்டிருக்கும் உள்நோக்கங்களை விளக்குதல்.
3. அமுல்படுத்தப்படும் நுண்கடன் திட்டங்கள் பெண்களின் அபிவிருத்தியில் ஏற்படுத்திய விளைவுகளை பகுப்பாய்வு செய்தல்.

### 1.3. ஆய்வு வினாக்கள்

1. சமுதாய அபிவிருத்தி கருதி பெண்களின் அபிவிருத்தியில் நுண்கடன் திட்டம் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது?
2. நுண்கடன் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் வழிமுறைகள் எவை?
3. நுண்கடன் திட்டங்கள் பெண்களின் அபிவிருத்தியில் ஏற்படுத்திய விளைவுகள் எவை? அதற்கான காரணங்கள் எவை?

4. இவற்றிலிருந்து விடுபட்டு பெண்களின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் எவை?

**1.4. ஆய்வுக்கோட்பாடு**

இவ் ஆய்வுக்குரிய ஆய்வுக்கோட்பாடாக போல் வில்கின்சன்(Paul Wilkinson) , ஜக் குவாட்டர் (Jack Quarter) ஆகியோரின் சமுதாய அடிப்படை அபிவிருத்தி கோட்பாடு (Community-Based Development theory: 1995) முன்வைக்கப்படுகின்றது. அந்தவகையில் சமுதாய அடிப்படை அபிவிருத்தி கோட்பாடு (Community-Based Development theory) இன் படி குறிப்பாக சமுதாய அபிவிருத்தி திட்டங்கள், வினைத்திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மூன்று பிரதான அடிப்படைத் தத்துவங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1. அத்திட்டம் குறித்த சமுதாய உள்ளுணர்வு (community consciousness)
2. வலுவூட்டல் சார்ந்த தந்திரோபாயங்கள் (strategies of empowerment)
3. சமுதாய மட்டத்திலான ஆதரவளிக்கப்பட்ட கட்டமைப்புக்கள் (Establishment of supportive structures).

இவ் அடிப்படைத் தத்துவங்களினை அடியொற்றி பெண்களின் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படும் நுண்கடன் திட்டங்களும் சமுதாய அபிவிருத்தி சட்டகங்களுக்கேற்ப, அதன் அடிப்படை கொள்கைகளுக்கேற்ப இயங்குகின்றதா, அவ்வாறு இயங்கும் பட்சத்தில் பெண்கள் அடைந்த முன்னேற்றங்களையும், நிதி நிறுவனங்கள் பயனாளிகளுக்கு கடனை எவ்வாறு வழங்குகின்றது, பயனாளிகளுக்கும், வழங்குனர்களுக்குமுள்ள உள்நோக்கங்கள் போன்ற விடயங்களை அறிய இவ் ஆய்வில் இக்கோட்பாடு பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் சமுதாய அபிவிருத்தி சட்டகங்களுக்கேற்ப நுண்கடன் திட்டங்கள் செயற்பட தவறும் பட்சத்தில் பெண்கள் அபிவிருத்தி ரீதியில் எதிர்நோக்கும், சமூக, பொருளாதார பிரச்சினைகளை அறியவும் இக்கோட்பாடு பொருத்தமுடையதாக அமைகின்றது. ஆக, பெண்களின் அபிவிருத்தியில் நுண்கடன் திட்டம் ஏற்படுத்தும் விளைவுகளை அறிந்து கொள்ளவும், விளங்கிக்கொள்ளவும் இவ்வாய்விற்கு இக்கோட்பாடு பொருத்தமுடையதாக காணப்படுகின்றது.

**1.5. ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது கூடியளவு பண்பு ரீதியான ஆய்வு முறையை உள்ளடக்கியதாக அமைந்துள்ள அதேவேளை தேவைக்கேற்ப எண் ரீதியான ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வில் எண்ரீதியான, பண்புரீதியான ஆகிய இரு ஆய்வு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ் ஆய்வானது விவரணரீதியான ஆய்வாக (descriptive analysis) காணப்படுகின்றது.

இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவு சேகரிக்கும் முறைகளாக நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானிப்புக்கள், பங்கு பற்றி அவதானித்தல், தனியாள் விடய ஆய்வு,

மையக் குழு கலந்துரையாடல் போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் நுண்கடன் நிறுவன உத்தியோகஸ்தர்கள், முகாமையாளர்கள், சமூக நலன்விரும்பிகள், கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகஸ்தர், சமுர்த்தி உத்தியோகஸ்தர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர், மகளிர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நுண்கடன் பயனாளிகளாக பெண்களின் குடும்பத்தினர் ஆகியோருடன் கலந்துரையாடல், நேர்காணல், வினாக்கொத்து என்பவற்றினை கொண்டும் இவ்வாய்வுக்கான முதலாம் நிலை தரவுகள் பெறப்படுகின்றன. பத்து நபர்களை உள்ளடக்கிய மைய குழு கலந்துரையாடல் (Focus Group Discussion (FGD)) ஒன்றும் முதலாம் நிலைத்தரவு சேகரிக்கும் முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை உள்ளடக்கியவாறான நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், சுற்று நிரூபங்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள், நுண்கடன் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள், புள்ளி விபர தரவுகள், பிரதேச செயலகம், கிராம சேவகரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள், புள்ளிவிபர எண்ணிக்கையிலான தரவுகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றின் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டுள்ளது.

இவ் ஆய்வில் நிகழ்தகவு சாரா மாதிரியினுள் உள்ளடங்கும் நோக்கமாதிரி (purposive sampling) பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் நோக்கமாதிரியை அடிப்படையாக கொண்டு தரவுகளை சேகரிப்பதற்காக நிகழ்தகவு சார் மாதிரியில் உள்ளடங்கும் எளிய எழுமாற்று மாதிரியும் (simple random sampling) பயன்படுத்தப்படுகின்றது. குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடனை வழங்கிவருகின்ற 10 நிறுவனங்களிலிருந்து பெண்களுக்காக வழங்கப்பட்ட 591 நுண்கடன்களில் நோக்கமாதிரியை (purposive sampling) பயன்படுத்தி எளிய எழுமாற்று மாதிரித்தெரிவின் (simple random sampling) அடிப்படையில் 50 நுண்கடனைப் பெற்ற பெண்கள் மாதிரியாக செய்யப்படுகின்றனர்.

அட்டவணை 1 : மாதிரிச் சட்டகம்

| ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடனை வழங்கும் நிறுவனங்கள் (2019) | பெண்களை மையமாக கொண்டு வழங்கப்பட்ட நுண்கடன்களின் எண்ணிக்கை (2019) | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| LOLC Development Finance(BRAC) | 127 | 50 |
| LOLC | 112 | |
| HNB Grameen Finance Ltd | 26 | |
| Commercial Credit & Finance PLC | 22 | |
| Berendina Micro Investments company Limited | 92 | |
| Young Men's Christian Association (YMCA) | 43 | |
| Regional Development Bank(RDB) | 34 | |
| People's Bank | 08 | |
| Bank of Ceylon (BOC) | 24 | |
| samurdhi | 103 | |
| **Total** | **591** | **50** |

மூலம் : ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டவை, (2020).

## 2. கலந்துரையாடல்

### 2.1. நுண்கடன் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் விதங்கள்

எந்தவொரு அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக இருந்தாலும் அதனை செயற்படுத்துபவர்களதும், பயனாளிகளதும் திட்டமிடல் என்பதும், உள்நோக்கம் என்பதும் அவசியமானதாகும். நுண்கடன் திட்டமானது அமுல்படுத்தப்பட்டு அது சமூகத்தில் விளைவுகளை உண்டுபண்ணுவதற்கு நுண்கடனை வழங்குனர்கள், பயனாளிகள் ஆகிய இருதரப்பினது செயற்பாடுகளும் இன்றிமையாததாகும். இதனடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடன் திட்டம் அமுல்படுத்தப்படும் விதத்தில் வழங்குனரதும், பயனாளிகளதும் செயற்பாடுகள் பின்வருமாறு நோக்கப்படுகின்றது.


### 2.1.1. நுண்கடன் வழங்கும் அணுகுமுறை

பங்களாதேஷில் கிராமீன் வங்கியானது நுண்கடனை வழங்குவதற்காக இறுக்கமான சமூக வலையமைப்பு ஒன்றினை சமூகத்திடையே பயன்படுத்தியுள்ளது. தமக்கு பொருத்தமான 5 நபர்களைக் கொண்ட சிறுகுழுக்களாக ஒருங்கிணைத்து ஏழைகளை தனிமைப்படுத்தலில் இருந்து ஒருங்கிணைக்கும் அணுகுமுறையாக சிறுகுழுபொறிமுறையை நுண்கடன் வழங்கும் அணுகுமுறையாக பங்களாதேஷ் கையாண்டது. ஆனால் இவ் அணுகுமுறையை ஆய்வுப்பிரதேசத்தில் எடுத்து நோக்கும் வகையில், நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் நுண்கடன் சேவையானது இரண்டு விதமான முறைகளில் கடன்களை வழங்கி வருகின்றன.

1. தனியாள் கடன்
2. குழுக்கடன்

ஆனால் அதன் பயனாளிகளான பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனத்தின் வாடிக்கையாளர்களாக காணப்படுவதால் சிலர் குழுவாகவும், தனியாகவும் பெறும் அதேவேளை இவ்விரு அடிப்படையிலும் கடனை எடுத்துள்ளமையை கள ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றது.

**வரைபடம்: 1: நுண்கடனை பெறும் விதம்**





**மூலம் : கள ஆய்வு, 2020.**

### 2.1.2. பிணையாளி தொடர்பான விடயம்

பங்களாதேஷில் அறிமுகப்படுத்தப்பட்ட நுண்கடன் திட்டமானது ஏழைப்பெண்களை மையமாக கொண்டதால் அவர்களுக்கு பிணையாளிகள் அரசாங்க உத்தியோகஸ்தரை தேர்ந்தெடுப்பதோ, ஏனைய உறவினர்களை தேர்ந்தெடுப்பதோ சிரமமான விடயம் என்பதால் 3-5 வரையான குழு உறுப்பினர்களை ஒன்றிணைத்து குழு உறுப்பினர்களையே பிணையாளியாக உள்ளடக்கி நுண்கடன் வழங்கி பெண்களின் அபிவிருத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடன் திட்டத்தின் பிணையாளி தொடர்பாக பல்வேறு விதமாக காணப்படுகின்றது.

**வரைபடம் : 2 பிணையாளிகள் தொடர்பான விபரம்**





**மூலம் : கள ஆய்வு, 2020.**

### 2.1.3. கடன் பெறுவதற்கான கால எல்லை

நுண்கடனைப் பொறுத்தவரை கடனுக்காக விண்ணப்பித்து ஆவணங்களை சரியாக சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இக்கடன் வழங்கும் காலம் கணிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் இத்திட்டத்தின் பயனாளிகள் கடன் வழங்கப்படும் கால அளவை பொறுத்து நுண்கடன் நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதும், ஆர்வம் காட்டுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வடிப்படையில் நுண்கடன் திட்டம் விண்ணப்பித்து குறுகிய காலத்தில் வழங்கப்படுவதானது அவர்கள் மேலும் மேலும் கடன் பெறவும், ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் கடனை பெறவும் தூண்டுகின்றது. இவ்வாறான நிலைமையும் பெண்களின் அபிவிருத்தியில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்த காரணமாக அமைகின்றது.

**வரைபடம்: 3: நுண்கடனை பெறுவதற்கான கால எல்லை**





மூலம் : கள ஆய்வு, 2020

**2.1.4. கடனை மீளச்செலுத்தும் முறை/ கடன் அறவீட்டு முறை**

நுண்கடன் வழங்கும் நிறுவனங்களின் அறவீடுகள் வாராந்தம் அல்லது அரைமாதாந்தம் அல்லது மாதாந்த அடிப்படையில் கடன் மீளளிப்பு தொகையை ஏழைகள் மீளளிக்கக் கூடிய வகையில் பிரித்து வழங்கப்படுகின்றன. ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடனை பெற்ற பயனாளிகளான பெண்களிடம் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கமைய குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் வாராந்த அடிப்படையிலும், அரை மாதாந்த அடிப்படையிலும், மாதாந்த அடிப்படையிலும், நீண்டகால தவணை அடிப்படையிலும் நுண்கடனை மீளளிக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

**வரைபடம்:.4 கடனை மீளச்செலுத்தும் முறை**





மூலம்: கள ஆய்வு, 2020

**2.1.5. நிறுவனத்தினர் கடனை அறவிடும் விதம்**

நுண்கடனை பெற்ற நிறுவனத்தினரால் நுண்கடனை அறவிடுவது பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

**வரைபடம்: 5 நுண்கடனை மீள அறவிடும் முறை**




**மூலம்: கள ஆய்வு, 2020**

## 2.2. சமுதாய அபிவிருத்தி நுட்பங்களுடன் வழங்கும் விதம்

நுண்கடன் திட்டங்களின் விளைவுகளில் அனுகூலத்தன்மைகளையும், பிரதிகூலத்தன்மைகளையும் தீர்மானிப்பது என்பது அத்திட்டங்களின் அமுலாக்கங்கள் எந்தளவுக்கு சமுதாய அபிவிருத்தி நடைமுறைகளோடு பொருந்திப்போகின்றது என்பதை பொறுத்தே அமைகின்றது. சமூக, பொருளாதார மேம்பாடுகளை இலக்காக கொண்ட அபிவிருத்தி அல்லது சமூக நல மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் சமுதாய அபிவிருத்தி நுட்பங்கள் சார்ந்த கோட்பாட்டுச் சட்டகத்தினை பின்பற்றியதாகவே நடைமுறைப்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். இவ்வடிப்படையில் சமுதாய அபிவிருத்தி சட்டக நுட்பங்களை இம்மூன்று பிரிவின் அடிப்படையில் நோக்கலாம்.

1. சமுதாய உள்ளுணர்வு (Community Consciousness)
2. வலுவூட்டல் சார்ந்த தந்திரோபாயங்கள் (Ctrategies of Empowerment)
3. சமுதாய மட்டத்திலான ஆதரவளிக்கப்பட்ட கட்டமைப்புக்கள் (Establishment of supportive structures)

இம் மூன்றின் அடிப்படையில் நுண்கடனை வழங்குனர்களும், பயனாளிகளும் செயற்படுகின்ற விதம் அத்திட்டத்தின் வெற்றிக்கு சான்று பகிக்கின்றது. இவ்வாறில்லாத பட்சத்திலே பல எதிர்மறையான விளைவுகள் ஏற்பட வழிவகுக்கின்றது.

### 2.2.1. சமுதாய உள்ளுணர்வு (Community Consciousness)


நுண்கடனை அமுல்படுத்தும் போது நுண்கடன் வழங்குனர்கள் தாம் எந்நோக்கத்திற்காக அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றனர் எனவும், அதனது வட்டிவீதம் தொடர்பான கொள்கைகள், இத்திட்டத்தால் பயனாளிகளான பெண்களின் அபிவிருத்தியில் ஏற்படும் மாற்றம், அவ்வெற்றியை அடைவதற்கு குறித்த கடனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற தெளிவினை வழங்க வேண்டும். அதே நேரம் பயனாளிகளான பெண்களும் அத்திட்டத்தை எடுத்த நோக்கத்திற்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனவும், அதனால் எமது அபிவிருத்தியை

எவ்வாறு கட்டியெழுப்பி சமுதாயத்தில் தாமும் ஒருவராக முன்னேற்றமடைய வேண்டும் என்ற தெளிவும் இருக்க வேண்டும். இவ்வாறில்லாத பட்சத்திலே பல எதிர்மறையான விளைவுகள் ஏற்பட வழிவகுக்கின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் நுண்கடனை பெறும் நோக்கத்திற்கேற்ப அதனை பயன்படுத்த வேண்டும் என்ற உள்ளுணர்வு உங்களிடம் உள்ளதா? என வினவும் போது ஆம் என 32 வீதமானோர்களும், இல்லை என 38 வீதமானோர்களும், ஓரளவு என 30 வீதமானோர்களும் பதிலளித்தனர்.

**2.2.1.1. .நுண்கடன் திட்டம் பற்றி பயனாளிகளிடம் காணப்படும் தெளிவு**

நுண்கடனை பெற்றுள்ள பயனாளிகளான பெண்களிடம் இத்திட்டம் தொடர்பான தெளிவு காணப்படுகின்றதா என வினவிய போது 12 சதவீதமானோர் ஆம் என்ற பதிலையும், 74 சதவீதமானோர் இல்லை என்ற பதிலையும், 14 சதவீதமானோர்கள் ஓரளவு காணப்படுகின்றது என தெரிவித்தனர்.

**வரைபடம்: 6. நுண்கடன் திட்டம் தொடர்பாக நுண்கடன் பயனாளிகளிடம் காணப்படும் தெளிவு**





**மூலம் : கள ஆய்வு, 2020.**

**2.2.1.2. நுண்கடன் திட்டம் தொடர்பாக நிறுவனங்கள் தெளிவூட்டும் விதம்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நுண்கடன் பயனாளிகளான பெண்களிடம் நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் நுண்கடனை வழங்க முன்னர் அது தொடர்பான தெளிவை தருகின்றதா? என வினவிய போது 22 சதவீதமானோர் ஆம் எனவும், 58 சதவீதமானோர் இல்லை எனவும், 20 வீதமானோர் ஓரளவு தெளிவுபடுத்துகின்றனர் எனவும் பதிலளித்தனர்.

**வரைபடம்: 7.: நுண்கடன் நிறுவனங்கள் தெளிவூட்டும் விதம்**





**மூலம் : கள ஆய்வு, 2020.**

## 2.2.2. வலுவூட்டல் சார்ந்த தந்திரோபாயங்கள் (strategies of empowerment)

### 2.2.2.1. வலுவூட்டல் சார்ந்த பயிற்சிகள் வழங்குதல்

சுயதொழிலுக்காக நுண்கடனை வழங்கும் பட்சத்தில் அதன் மூலம் வருமானத்தை ஈட்டி கடனை செலுத்துவதோடு சேமிப்பையும் ஊக்குவித்து, தமது தேவைகளை நிறைவேற்றும் வகையில் வலுவூட்டல் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுவது அவசியமாகும். ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் நுண்கடன் திட்டத்தினை வழங்கும் நிறுவனங்கள் வலுவூட்டல் சார்ந்த பயிற்சிகளை வழங்குகின்றனவா? என வினவிய போது 12 சதவீதமான பயனாளிகள் ஆம் எனவும், 88 வீதமான பயனாளிகள் இல்லை எனவும் பதிலளித்தனர்.

**வரைபடம்: 8: நுண்கடன் பயனாளிகளுக்கான வலுவூட்டல் பயிற்சிகள்**





**மூலம்: கள ஆய்வு, 2020.**

### 2.2.2.2. நுண்கடனை வழங்கிய பின்னர் மேற்பார்வை செய்யப்படுதல்

ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களிடம் சுயதொழில், வீடமைப்பு, கால்நடைவளர்ப்பு போன்ற நோக்கம் கருதி நுண்கடனை பெற்ற பின்னர் அந்நோக்கம் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என நிறுவனத்தினரால் மேற்பார்வை செய்யப்படுகின்றதா என வினவிய போது 18 வீதமானோர்கள் ஆம் எனவும், 82 சதவீதமானோர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர்.

**வரைபடம் : 9 மேற்பார்வை செய்தல்**





**மூலம்: கள ஆய்வு (2020)**

### 2.2.3.சமுதாய மட்டத்திலான ஆதரவளிக்கப்பட்ட கட்டமைப்புக்களினூடாக வழங்குதல் (Establishment of supportive structures)

நுண்கடனை அமுல்படுத்தும் போது நுண்நிதி நிறுவனங்களும், பயனாளிகளும் சமுதாயத்திலுள்ள அமைப்புக்களுடன் தொடர்பை பேணி நுண்கடனை பெறுவதே சிறந்தது. ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 50 மாதிரிகளின் அடிப்படையில் சமுதாயத்திலுள்ள ஆதரவளிக்கப்பட்ட கட்டமைப்பிற்கூடாக நுண்கடனை பெற முனைகின்றீர்களா என வினவும் போது 12 வீதமானோர்கள் ஆம் எனவும், 88 வீதமானோர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர்.

**வரைபடம்: 10 சமுதாயத்திலுள்ள ஆதரவளிக்கப்பட்ட கட்டமைப்புகளினூடாக பெறல்**





**மூலம்: கள ஆய்வு (2020)**

இவ்வாறான அமுல்ப்படுத்தல் வழிமுறைகளுக்கு பொருந்தாமல் வழங்கப்படும் நுண்கடன்திட்டமானது சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

### 3. பெண்களின் அபிவிருத்தியில் நுண்கடன் திட்டத்தின் விளைவுகள்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 50 மாதிரிகளில் நுண்கடனை பெற்றதன் மூலம் உங்களது அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என வினவிய போது 6 வீதமானோர்கள் ஆம் எனவும், 84 வீதமானோர்கள் இல்லை எனும் பதிலையும், 10 வீதமானோர்கள் ஓரளவு எனும் பதிலையும் அளித்தனர்.

**வரைபடம்: 11. பெண்களின் அபிவிருத்தியில் விளைவுகள் வெளிப்பட்ட விதம்**




**மூலம்: கள ஆய்வு, 2020**

### 2.3. பெண்களின் சமூக அபிவிருத்தியில் ஏற்படுத்தும் விளைவுகள்

நுண்கடன் திட்டமானது சமூக அபிவிருத்தி என்ற வகைப்பாட்டினுள் பெண்களுக்கு முடிவெடுக்கும் திறன் (Decision Making), தலைமைத்துவம் (Leadership Qualities), தன்னம்பிக்கை (Self Confidence), தொடர்பாடல் (Communication), முகாமைத்துவதிறன் (Managerial skill), ஒழுங்கமைக்கும் திறன் (Organizing skill), சமுதாயத்தில் பங்கேற்கும் திறன் (Community Participation) என்பவற்றை ஏற்படுத்துகின்றதை ஏனைய நாடுகளின் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் நோக்கும் போது பெண்களின் சமூக அபிவிருத்தியில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றதை காணக்கூடியதாக உள்ளது.

### 2.3.1. அடிப்படை வசதிகள் பூர்த்தியாக்கப்படாத நிலைமை


ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 67 வீதமானவர்கள் அடிப்படை வசதிகளான வீடு, உட்கட்டமைப்பு வசதியானது மின்சாரம், மலசலகூட வசதிகள், குடிநீர், தொடர்பாடல், போக்குவரத்து வசதிகளற்றோர்களாக காணப்படுகின்றனர். 33 வீதமானவர்கள் மாத்திரம் இத்தேவைகளை பூர்த்தி செய்துள்ளனர்.

### 2.3.2. குடும்ப ஒருங்கிணைவு/இடைத்தொடர்பு இன்மை

நுண்கடன் திட்டமானது பொருளாதார அபிவிருத்திக்கூடாக ஆரம்ப சமூக நிறுவனமான குடும்பத்தில் பெண்கள் தாமாக முடிவெடுக்கும் திறனை வளர்க்கவும், தமது திறமைகளை வெளிப்படுத்தவும், குடும்பத்திலோ, சமூகத்திலோ ஏற்படும் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்து ஒழுங்கமைக்க கூடியவாறு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதும், தனிநபர் அபிவிருத்தியை கட்டியெழுப்பும் கருவியாகவும் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் குடும்பத்தில் ஒருங்கிணைவும், இடைத்தொடர்பும் ஏற்பட வழிவகுக்கின்றது. ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் மாதிரியாக தெரிவுசெய்யப்பட்ட நுண்கடன் பயனாளிகளின் குடும்ப

நிலைமையை நோக்கும் போது முரண்பாட்டை தோற்றுவிக்கின்ற கருவியாக குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடன் திட்டமானது காணப்படுகின்றது.

**வரைபடம்: 12: குடும்பத்தில் முரண்பாடு ஏற்படுதல்**





**மூலம்: கள ஆய்வு, 2020**

### 3.1.3. விவாகரத்து/ பிரிந்து செல்லல்/மறுமணம் ஏற்படல்

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கமைய குடும்பத்தில் கடன்சுமை காரணமாக ஏற்படும் முரண்பாடானது குடும்பச் சிதைவையும், பிரிவையும் ஏற்படுத்துகின்றது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

**வரைபடம்: 13: விவாகரத்து/மறுமணம்/பிரிந்து செல்லல்**





**மூலம்: கள ஆய்வு, 2020**

### 3.1.4. தற்கொலை

இவ் ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடனால் ஒவ்வொரு வருடமும் தற்கொலைகள் இடம்பெற்று வருவதை அவதானிப்புக்கள் மூலமும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தில் பதிவாகிய சம்பவ பதிவேட்டு அறிக்கையிலிருந்தும் கண்டறியக்கூடியதாக இருந்தது.

**வரைபடம்: 14: தற்கொலை பற்றிய விபரம்**





**மூலம்: ஏறாவூர் பற்று பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவகர் கையேடு**

### 3.1.5. சமூக நல்லிணக்கம்/ சமூக ஒருமைப்பாடு இன்மை

பொதுவாக நுண்கடன் திட்டமானது பெண்களை சமூகத்தில் சமூகமயப்படுத்துவதிலும், சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவற்காகவும் பங்களாதேஷின் கிராமீன் வங்கியால் குழுவாக இணைத்து கடன் வழங்கும் அணுகுமுறையை நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கமைய குழுரீதியாக அமுல்ப்படுத்தப்படும் நுண்கடனானது சமூகத்திலுள்ளவர்களுடன் முரண்பாட்டையே தோற்றுவிக்கின்றது என கருத்து தெரிவித்தனர்.

**வரைபடம்: 15: சமூக நல்லிணக்கம் வெளிப்படும் விதம்**




**மூலம்: கள ஆய்வு, 2020**

### 3.1.6.பெண்கள் வெளிநாடு செல்லல்/ வெளியிடத்திற்கு தொழிலுக்கு செல்லல்


ஆய்வுப்பிரதேசத்தில் பெண்கள் வெளிநாட்டிற்கு தொழிலுக்கு செல்லும் நிலை அதிகரித்து வருகின்றது. இதனடிப்படையில் கடந்த காலத்தில் நுண்கடனை பெற்ற பெண்கள் அப்பணத்தை மீளச் செலுத்துவதற்கு வழியில்லாமல் வெளிநாட்டிற்கு பணிப்பெண்ணாகவும் சென்றிருந்தமை இவ்வாய்வின் மூலம் வெளிப்படுகின்றது. இதனடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 24 வீதமானோர்கள் கடன் சுமையை குறைப்பதற்காகவும், எடுத்த கடனை மீளச் செலுத்துவதற்காகவும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கு சென்று தற்போது கொழும்பில் உள்ள

தேயிலை தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலைகளில் தொழிலுக்கு சென்று வருமானமீட்டுவதாகவும் தெரிவித்தனர்.

### 3.1.7. முடிவெடுக்கும் திறன் இன்மை

நுண்கடன் திட்டமானது பெண்களை மேம்படுத்தும் முகமாக பொருளாதார ரீதியாக அவர்களை வலுவூட்டி வருமானத்தை பெற்றுக்கொள்வதன் ஊடாக குடும்பத்திலோ, சமூகத்திலோ பெண்களின் முடிவெடுக்கும் திறனை வளர்த்துக்கொள்ளவும், தலைமைத்துவத்தை மேம்படுத்தி பெண்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டமாகும். ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடன் பயனாளிகள் மேலும் கடன் சுமைக்கு உள்ளாகி குடும்பத்திலோ, சமூகத்திலோ தாமாகவே சுயமாக முடிவெடுக்கும் திறன் அற்றவர்களாக காணப்படுகின்றனர்.

**வரைபடம்: 16: முடிவெடுக்கும் திறன் வெளிப்படும் விதம்**




**மூலம்: கள ஆய்வு, 2020**

## 2.4. பெண்களின் பொருளாதார அபிவிருத்தியில் ஏற்படுத்தும் விளைவுகள்

நுண்கடனானது ஏழை மக்களை சுயதொழில் முனைவோராக உருவாக்குவதோடு அதன் மூலம் வருமானத்தை ஈட்டி பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்வதை நோக்காக கொண்டு வழங்கப்படும் சிறிய கடன் தொகையாகும். ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் நுண்கடனானது பயனாளிகளான பெண்களின் பொருளாதார அபிவிருத்தியில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றது.

### 2.4.1. பெண்கள் சுயதொழிலில் ஈடுபடாமை


சுயதொழிலுக்காக வழங்கப்படும் நுண்கடன் திட்டத்தினடிப்படையில் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் பயனாளிகளான பெண்களின் தொழில் நிலைமையை நோக்குகின்ற போது சுயதொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தொழிலில்லாமல் வீட்டில் இருக்கும் பெண்கள் 70 சதவீதத்தினராகவும், சுயதொழிலில் ஈடுபடும் பெண்கள் 30 சதவீதமாகவும் காணப்படுகின்றனர்.

### 2.4.2. வறுமை மேலும் அதிகரித்தல்

நுண்கடன் என்பது ஏழை மக்களது வறுமைத்தணிப்பிற்குரிய பொருளாதார கருவியாகும். ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் நிலையை நோக்கும் போது வறுமையை அதிகரிக்கின்ற செயற்பாடாக நுண்கடன் காணப்படுகின்றது. வருமானமட்டம் குறைவடைதலும்

கடன் சுமை அதிகரித்தலும் வறுமை அதிகரித்தலுமே இவ் ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள பயனாளிகளிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து வெளிப்படுகின்றது.

**வரைபடம்: 17: வறுமையின் நிலைப்பாடு**




**மூலம் : கள ஆய்வு, 2020.**

**3.2.3. வருமானமட்டம் குறைவடைதல்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் நுண்கடனை பெற்ற பின்னர் உங்களது வருமான மட்டம் உயர்வடைந்துள்ளதா என வினவும் போது, 90 வீதமானவர்கள் நுண்கடனை பெற்ற பின்னர் வருமானமே இல்லாத அளவிற்கு போயுள்ளதாகவும், 10 வீதமானவர்கள் வருமான மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். வருமானம் முற்று முழுதாக உயர்வடைந்துள்ளது என கருத்து தெரிவிக்கவில்லை.

## 3.2.4. கடன்சுமை அதிகரித்தல்

ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கமைவாக நுண்கடனானது கடன்சுமையை மேலும் அதிகரிக்கின்றது என குறிப்பிட்டனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 50 மாதிரியில் நுண்கடனால் கடன்சுமை அதிகரிக்கின்றதா என வினவும் போது 88 வீதமானவர்கள் கடன்சுமை அதிகரிக்கின்றது எனவும், 8 வீதமானவர்கள் ஓரளவு எனவும், 4 வீதமானவர்கள் இல்லை எனவும் குறிப்பிட்டனர்.

**3.2.5.சேமிப்புப் பழக்கம் இன்மை**


ஆய்வுக்குட்படுத்தி 50 மாதிரிகளின் அடிப்படையில் அவர்களிடம் நுண்கடனை பெற்ற பின்பு சேமிப்பு பழக்கம் உள்ளதா என வினவும் போது? அதற்கு 2 வீதமானவர்கள் ஆம் எனவும், 6 வீதமானவர்கள் ஓரளவு எனவும், 92 வீதமானவர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். அதாவது கடன்சுமையானது அதிகரித்த நிலையில் அக்கடனை மீளச்செலுத்த பணம் போதாத பட்சத்தில் சேமிப்பு பழக்கம் இல்லாமலே போகின்றது. கடன் சுமைதான் அதிகரிக்கின்றது என குறிப்பிட்டனர்.

**2.5. பெண்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட நேர்நிலையான விளைவுகள்**

பெண்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் நுண்கடன் திட்டமானது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தி இருந்தாலும் மிகக் குறைந்தளவிலான நேர்நிலையான

மாற்றங்களும் ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நுண்கடன் பயனாளிகளில் 6 வீதமானவர்களின் சமூக, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படுவதை காணலாம். அதாவது சுயதொழிலில் ஈடுபடுபவர்களாகவும், அதன் மூலம் ஓரளவு வருமானத்தை ஈட்டிக்கொள்பவர்களாகவும், அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் கடனை மீளச்செலுத்துபவர்களாகவும், சேமிப்பையும் மேற்கொள்பவர்களாகவும், அதன் மூலம் குடும்பத்தில் முடிவெடுக்கும் திறனை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**வரைபடம்: 18: பெண்களின் அபிவிருத்தியில் ஏற்பட்ட நேர்நிலையான முன்னேற்றம்**




**மூலம்: கள ஆய்வு, 2020**

**முடிவுரை**

இவ் ஆய்வுப்பிரதேசத்தில் பெண்களின் அபிவிருத்தியில் நுண்கடன் திட்டமானது ஏற்படுத்திய முன்னேற்றகரமான மாற்றங்களிற்கு மாறாக ஏற்படுத்திய பாதகமான விளைவுகளே அதிகமாக காணப்படுவதை தரவுப் பகுப்பாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. நுண்கடன் பயனாளிகளான பெண்கள் மத்தியில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதற்கு நுண்கடன் திட்டம் அமுலாக்கும் விதத்திலும், அதன் பயனாளிகளான பெண்களிலும், சமுதாயத்திலுள்ள அமைப்புக்களிலுமுள்ள குறைபாடுகளே காரணமாக அமைகின்றது என்பது இவ்வாய்வின் மூலம் இனங்கண்டு கொள்ளப்பட்டது. அவ்வகையில் சுயதொழிலுக்காக கடனை வழங்கிய போதிலும் பெண்கள் வேலையற்றோராக இருக்கும் நிலைமை, கடன்சுமை, தற்கொலை, குடும்பத்தில் முரண்பாடு ஏற்படுதல், குழுவிலுள்ள உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினருடன் முரண்படல், இதனால் சமூக ஒருமைப்பாடு அற்ற நிலை உருவாகுதல், சேமிப்பு பழக்கம் இல்லாமை, வருமானம் மட்டம் குறைவடைந்து, வறுமை பெண்களை ஆட்கொள்ளல் என பல சமூக, பொருளாதார விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றமையை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் 6 வீதமான பயனாளிகளின் மத்தியில் நேர்நிலையான விளைவுகள் ஏற்படுவதற்கு எவ்வாறான காரணிகள் தாக்கம் செலுத்தப்படுகின்றது எனவும், எவ்வாறு அத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது எனவும், பயனாளிகள் எவ்வாறான நிறுவனத்தில் பயனாளிகளாக உள்ளனர் எனவும் இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது. எனவே எந்தவொரு அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போதும் சமுதாய அபிவிருத்திக்குரிய நுட்பங்களுடன் பொருந்தும் வகையில் அமுல்ப்படுத்தப்படும் பட்சத்திலே அத்திட்டம் வெற்றியளிக்கும் என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது.

**உசாத்துணைகள்**

Ali . MS & Cook. K. 2020, 'Micro-Credit Programs for Empowering Women to Alleviate Poverty', *American Research Journal of Business and Management*, vol. 6, pp. 01-05.

Anindita Roy .2017, *'Effects of Micro-Credit Programmes on Women's Health: A Critical Review of Impact Studies with Special Reference to Grameen Bank in Bangladesh'*, Master Thesis, Hamburg University of Applied Sciences (HAW), pp.03-24

Wilkinson, P., & Quarter, J. 1995. *'A Theoretical Framework for Communily-Based Development'*, Economic and Industrial Democracy , SAGE, London, Thousand Oaks and NewDelhi,Vol.16,no.4,pp.525-551. Available at: https://doi.org/10.1177/0143831X95164003.

Shahidul Islam. Md., 2014. '*Impact of Grameen Bank's Microcredit program on The Living Standard of Rural Women: A Study in Bogra District'*, Development Compilation , Vol.10, no.2, pp. 95-107. Available at: https://www.researchgate.net .

Wenner M. D. 1995, *'Group credit: A means to improve information transfer and loan repayment performance'*, The journal of development studies, vol. 32, no.2, pp: 263-281. Available at: https://www.researchgate.net.

Chandrasiri, J.K.M.D & Bamunuarachchi B.A.D., 2016, *Microfinance Institutions in Sri Lanka: Examination of Different Models to Identify Success Factors*, Research report no:190, Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute, Sri Lanka, pp.14-23.

Anura Jayasinghe., 2019, *Women empowerment and microfinance in Sri Lanka:* With special reference to Homagama divisional secretariat division, International Journal of Multidisciplinary Research and Development, Vol. 5, Issue 12, pp:174-178.

Dalia Debnath , Sadique Rahman. Md., Debasish Chandra Acharjee, Waqas Umar Latif, & Linping Wang., (2019), *"Empowering Women through Microcredit in Bangladesh:* An Empirical Study", International Journal of Financial Studies, Vol. 7, no.3, pp: 01-11

Sam Daley-Harris. 2007. *State of the Microcredit summit campaign Report 2007*, Microcredit Summit Campaign Washington, DC 20002 USA, pp.34-56.

Shahidul Islam. Md., 2014, *Impact of Grameen Bank's Microcredit program on The Living Standard of Rural Women: A Study in Bogra District*, Development Compilation, Vol 10. No 02, pp: 95-107.